# பிளாஸ்டிக் தடை நடவடிக்கை; தமிழக அரசுக்கு நீதிபதிகள் பாராட்டு

## தலைமை செயலாளரை வழக்கில் இருந்து நீக்கவும் உத்தரவு

மதுரை, பிப்.15–

பிளாஸ்டிக்கை தடை செய்ய தமிழக அரசு எடுக்கும் நடவடிக்கைகளை மதுரை ஐகோர்ட்டு நீதிபதிகள் பாராட்டினர். இந்த வழக்கில் இருந்து தலைமை செயலாளரை நீக்கவும் உத்தரவிட்டனர்.

### பிளாஸ்டிக் தடை

மதுரையை சேர்ந்த கே.கே. ரமேஷ், மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில் கூறி இருந்ததாவது:–

தமிழகத்தில் பிளாஸ்டிக் பயன்பாட்டிற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் எந்த விதமான பிளாஸ்டிக்கை பயன் படுத்தலாம், எவற்றை பயன்படுத்தக்கூடாது என்பதில் தெளிவான வரைமுறைகள் கூறப்படவில்லை. இதுகுறித்த அரசாணையில் 'டி' பிரிவு பிளாஸ்டிக்கை பயன்படுத்தலாமா என்ற தகவல் இல்லை. பால் பாக்கெட்டுக்கு அனுமதி வழங்கிவிட்டு, தண்ணீர் பாக்கெட்டுகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. பிளாஸ்டிக் என்பது ஒரே வகையான பொருள் தான்.

மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் பிறப்பித்த விதியின் முக்கிய அம்சங்கள், பிளாஸ்டிக் தடைக்கான அரசாணையில் சேர்க்கப்படவில்லை. அதை சேர்த்தால் மட்டுமே பிளாஸ்டிக் பயன்பாடு முழுமையாக ஒழியும். எனவே நிபுணர் குழுவை அமைத்து பிளாஸ்டிக்கை முழுமையாக தடை செய்வதற்கான வழிமுறைகளை கையாள நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறி இருந்தார்.

### பாராட்டுக்குரியது

இந்த வழக்கு நீதிபதிகள் என்.கிருபாகரன், எஸ்.எஸ்.சுந்தர் ஆகியோர் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது, மனுதாரர் நேரில் ஆஜராகி, "ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் குறித்த எந்த வரைமுறையும் அரசாணையில் தெரிவிக்கப்படவில்லை. இதற்காக நிபுணர் குழு அமைத்து ஆய்வு செய்து, அனைத்து பிளாஸ்டிக்கையும் தடை செய்ய உத்தரவிட வேண்டும்" என்றார்.

அதற்கு நீதிபதிகள், "பிளாஸ்டிக்கை தடை செய்ய தமிழக அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் பாராட்டுக்குரியது. ஆனால் மனுதாரர் கோருவது போல குழு அமைத்து ஆய்வு செய்தால், பிளாஸ்டிக் தடையை அமல்படுத்துவது தாமதமாகும்" என்றனர்.

விசாரணை முடிவில், "இந்த வழக்கில் தமிழக அரசின் தலைமை செயலாளரை எதிர் மனுதாரராக சேர்த்தது தேவையற்றது. அவரை இந்த வழக்கில் இருந்து நீக்குகிறோம்.

இந்த வழக்கு தொடர்பான கருத்துக்களை அறிய தமிழக அரசுக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிடுகிறோம்" என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

MRB - 
2345
CLASSES C
17.2.19 (
இதற்கு முன்பு
72 பேர்
Updated
Unit Test + E
SRI SAI CO
9842189492, 97

2019-2-15 10:34